[1995 ஏப்ரல் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 304, திரு. டி. வேலையா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

304—

நாரணம்மாள்புரத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட நடவடிக்கை

***36832**—திரு. டி. வேலையா :*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி. நாரணம்மாள்புரத்தில் உள்ள துணை சுகாதார நிலையம் முழுமையாகச் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

துணை சுகாதார நிலையம் மோசமான நிலையில் இருந்தது. தற்போது மீண்டும் அந்த இடத்திலே அவர்கள் பணியாற்றத் தொடங்கி இருக்கிறார்கள். இருந்தாலும், மீண்டும் இருக்கிற பழுதுகளைச் சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையில், அங்கே இருக்கிற பணியாளர்களுடைய strength and working pattern ஆகியவைகளை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கட்டிடம் பற்றிய கேள்வி. கட்டிடத்தில் என்ன பழுதுபார்க்கப்படும் என்பதைப் பற்றியெல்லாம் சொல்லி இருக்கிறேன். வொர்கிங் பேட்டர்ன் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், அங்கே இருக்கிற பணியாளர்கள் அங்கேயே இருந்து பணியாற்ற வேண்டும் என்பதுதான். அங்கே டெலிவரிக்கு வருகிறவர்களை கிராம சுகாதார செவிலியர்கள் கவனிக்க வேண்டும். வீடு வீடாகப் போய் eligible couple கணக்குகளையெல்லாம் அவர்கள் எடுக்க வேண்டும். குடும்ப நலத் திட்டம் பற்றி பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். இத்தனை பணிகளையும் அவர்கள் செய்ய வேண்டும். டெலிவரி கண்டக்ட் செய்ய

1995 ஏப்ரல் 17]

வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிறது. ஒருவேளை அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டும் என்ற நிலை வந்தால் அவர்களை அனுப்ப வேண்டும். அதுபோல, ஸ்டெர்லைசேசன் போன்ற பணிகளைச் செய்ய அவர்களுக்கு டார்கட் நிர்ணயம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள். அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நபர்களை எல்லாம் அழைத்துக் கொண்டுபோய், ஆப்பரேஷன் செய்து, அவர்களுடைய வீட்டிலே கொண்டுபோய் விடவேண்டிய பணியையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. வேலையா : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி, கட்டிடத்தைப் பற்றியது அல்ல. நான் அந்தப் பகுதியைச் சுற்றிப்பார்க்கச் சென்றபோது, அங்கே மருத்துவர்கள் யாருமே வரவில்லை என்பதுதான் எல்லோருடைய புகாராக இருந்தது. அதன் அடிப்படையிலேதான் இந்தக் கேள்வியை நான் கேட்டிருந்தேன். மேலும், நான் அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால், சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, அல்லது மேலதிகாரிகளாக இருந்தாலும் சரி, அவர்களுடைய பணியைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு நேரமும் அங்கே சென்று, துணை சுகாதார நிலையம் முறையாகச் செயல்படுகிறதா என்பதைப் பார்ப்பது இயலாத காரியம். ஆகவே, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களே அதைக் கண்காணிப்பதற்கு வசதியாக to make the employees of that institution more responsible and more accountable அமைச்சர் அவர்கள், அங்கே கமிட்டி ஒன்றை அமைக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்கும். முதலில் மருத்துவமனைகளுக்கு மட்டும் கமிட்டி அமைக்கலாம் என்ற ஒரு நிலை இருக்கிறது. அதிலே அரசு அதிகாரிகள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட இருக்கிறார்கள். மற்ற உறுப்பினர்களை நியமிப்பது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது. ஆனால், சப்-சென்ட்டர் லெவலிலே அந்த மாதிரி கமிட்டி அமைப்பது தேவையா என்பது ஒரு கேள்விக் குறியாக இருக்கிறது. காரணம், அங்கே பெண்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பல்வேறுவிதமான பணிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கமிட்டி அமைக்கப்படுகிறபொழுது, மீட்டிங் எல்லாம் போடுகிறபோது, காலவிரயம் ஆகின்ற வாய்ப்பு வரும். இருந்தாலும்கூட, பெண்களைக் கொண்டே ஒரு கமிட்டி அமைக்க முடியுமா என்பதை அரசு ஆலோசிக்கும்.